2011 ஜனவரி 10]

4—

தேர்வுதளம்

***128277—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரில் ஓட்டுநர் தேர்வுதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கல்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்வுதளம் அமைப்பதற்கென தகுந்த நிலம் பெறப்பட்ட பின்னர் தேர்வுதளம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இடம் தேர்வு செய்த பிறகு அந்த ஓட்டுநர் தேர்வுதளம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான அரசு நிலம் அந்தப் பகுதியிலே ஏராளமாக இருக்கிறது. எனவே, உடனடியாக இந்த ஆண்டே அமைப்பதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். மேலும், அப்படி அமைக்கிற இடத்தில், I.R.T. தரமணி மற்றும் கும்மிடிப்பூண்டியில் இருப்பதுபோன்று, தரமான தேர்வுதளம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களால், 2006-க்குப் பிறகு 13 இடங்களில் ஓட்டுநர் தேர்வுதளம் புதியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த 13 இடங்களில் I.R.T.-ல் இருப்பதைப்போல, தரமான தேர்வுதளங்கள் எல்லாம் ஒவ்வொரு

இடத்திலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் மூலமாக விரைவுபடுத்தி இடத்தை எங்களுக்குத் தருவார்களேயானால் விரைவிலே அந்தப் பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு R.T.O. அலுவலகப் பகுதியிலே இருக்கிற பல்வேறு பகுதிகளை இப்போது மீனம்பாக்கம் R.T.O. பகுதிக்கு மாற்றியிருக்கிறார்கள். இது செங்கல்பட்டு வட்டத்தில் இருக்கிற மக்களுக்கு மிகப் பெரிய ஒரு அச்சுறுத்தலாக இருக்கிறது. எனவே, மீண்டும் நம்முடைய அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே இயங்கி வந்த செங்கல்பட்டு வட்டத்திலுள்ள அந்தப் பகுதிகளை மீண்டும் செங்கல்பட்டு R.T.O. அலுவலகப் பகுதிக்கு மாற்றுவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களால், இந்த 4½ ஆண்டுகளில் 39 புதிய அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் என்று 39 அலுவலகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டு, இருக்கிற பகுதிகளைப் பிரித்து அந்தந்தப் பகுதிகளோடு இணைத்திருக்கிறார்கள். மக்களுக்குச் சிரமம் என்றால், அதைக் குறித்துக் கொடுத்தால் கவனித்து, மீண்டும் அந்த மக்களுக்குத் தேவையான இடத்திலே அது அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே மெட்ரோ இரயில் பூந்தமல்லி வரையிலும் வருகின்றது. அதனை ஸ்ரீபெரும்புதூர் வரையிலும் நீட்டிப்பதற்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்

2011 ஜனவரி 10]

ஒத்துழைப்பு நல்கி, ஆணை பிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்ரோ இரயில் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தனிப் பிரிவின்கீழ் இயங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, அவர்கள் அதைக் கவனிக்கவேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.*

திரு. எம்.ஆர். சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-1-2011 ஆம் தேதி ஆத்தூரிலே தரம் உயர்த்தப்பட்ட R.T.O. அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்கு உத்தரவு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், தமிழகத்தினுடைய துணை முதல்வர் அவர்களுக்கும் எங்களது மாவட்ட அமைச்சர், அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாகவும், ஆத்தூர் தொகுதியிலே இருக்கக்கூடிய கல்வி நிறுவனங்களின் சார்பாகவும் மற்றும் நெல் கதிர் அரைவை இயந்திரம் வைத்திருக்கின்றவர்களின் சார்பாகவும், பஸ் உரிமையாளர்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தரவேண்டும், கட்டித் தருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அலுவலகம் திறக்கப்பட்டபோதே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேடையிலேயே அதைச் சொன்னார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தப் பகுதியிலே புதிய இடம் பார்த்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இடம் கிடைக்குமானால் அலுவலகம் புதிதாகக் கட்டுவதிலே எந்தச் சிரமமும் இல்லை.*

[2011 ஜனவரி 10

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள எனது திருப்போரூர் தொகுதிக்கு மாநகரப் பேருந்துகளை அதிக அளவில் இயக்கிய நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையிலிருந்து அதிகமான பேருந்துகள் என்னுடைய திருப்போரூர் தொகுதிக்குத்தான் வந்து கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக, அந்தத் தொகுதியிலே எனக்கு 'பேருந்து நாயகன்' என்ற பட்டமே கொடுத்திருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சென்னையிலிருந்து திருப்போரூர் தொகுதியிலுள்ள பல கிராமங்களுக்கு மாநகரப் பேருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பேருந்துத் தடங்களை அதிக அளவில் இயக்க வேண்டும். அதுமட்டுமல்ல, அங்கே மாநகரப் போக்குவரத்துப் பணிமனை ஒன்றைத் தொடங்க வேண்டும். திருப்போரூர் தொகுதியில் அதிக அளவிலே அரசு நிலங்கள் மற்றும் தனியார் நிலங்கள் உள்ளன. அந்த இடத்தைப் பெற்றுத் தருவதற்கு நாங்கள் தனியாருடன் பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே, மாநகரப் போக்குவரத்துப் பணிமனையை திருப்போரூர் தொகுதியிலே அமைத்துத் தரும்படி தாழ்மையுடன் கேட்டு, அதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலில் மாநகரப் பேருந்துகளெல்லாம் 40 கிலோமீட்டர் தூரம்தான் சென்று கொண்டிருந்தன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 50 கிலோமீட்டர் வரை செல்லலாம் என்று அனுமதி அளித்ததன் காரணமாக, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய

2011 ஜனவரி 10]

மாவட்டங்களில் உள்ள பகுதிகளுக்கு நேரடியாகப் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில், சென்னையிலே கிட்டத்தட்ட 2,000 பேருந்துகள் இருந்தன, இப்போது 3,000 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பணிமனையிலும் பேருந்துகள் வெளியிலேதான் நிற்கக்கூடிய அளவிற்கு இட நெருக்கடி இருக்கிறது. எனவே, பணிமனைகளை வெளியிலே கொண்டு செல்வதற்குரிய ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்கெங்கே இடம் கிடைக்குமோ அங்கெல்லாம் பணிமனைகளைக் கொண்டு செல்வதற்கு இப்போது ஆய்வு நடந்து கொண்டிருக்கின்றது. திருப்போரூர் தொகுதியிலே பணிமனை அவசியம் தேவை என்று கருதி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் பெற்றுத் தருவார்களேயானால் பணிமனை அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

நடமாடும் மருத்துவமனைகள்

***17688—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகரங்கள், முக்கிய நகரங்களில் நடமாடும் மருத்துவமனைகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொலைதூரத்தில் வசிக்கும் மக்கள், எளிதில் சென்றடைய முடியாத கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் மற்றும் மலைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு தக்க மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் தமிழ்நாட்டில்